# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 412/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. வரதராஜ பெருமாள் **Rw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் முதுநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 2 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட Innova Car பதிவு எண். TN-02-AH-0697 வாகனத்தினை 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்த காப்பீடு

சான்றிதழ் மற்றும் விதிமுறைகள் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் எ.ம.சா.ஆ. 1 ஆகும். 2) இறந்துபோன தலைமை காவலர் சுந்தரையா என்பவரின் ஓட்டுநர் உரிமம் எ.ம.சா.ஆ. 2 ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் ஈடுபட்ட வாகனமானது 4 சக்கர வாகனம் என்றால் சரிதான். அந்த இன்னோவா காரின் ஓட்டுநரின் பெயரில் தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். அந்த வாகனம் முழுமையான காப்பீடு செய்யப்பட்ட வாகனம் என்றால் சரிதான். எங்கள் காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்தவரை விபத்தில் இறந்துபோன நபர் ஒரு 3ம் தரப்பினர் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் மேற்படி இன்னோவா காரில் எந்த விதமான விதிமீறல்களும் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1ம் எதிர்மனுதாரர் சம்பவ சமயத்தில் மது போதையில் இருந்தார் என்பதை காட்ட காவல் துறையினர் ரத்த பரிசோதனையோ, சிறுநீர் பரிசோதனையோ செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல் மருத்துவரும் மேற்படி நபர் மதுபோதையில் இருந்ததாக குறிப்பிட்டு சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளிப்பது வழக்கம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன காவலரின் ஓட்டுநர் உரிமம் அவர் உயிருடன் இருந்த காலக்கட்டத்தில் எந்த காரணத்தினாலும் ரத்து செய்து வைக்கப்பப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எங்கள் களப்பணியாளர் மேற்படி நபரின் ஓட்டுநர் உரிமம் மற்றும் பிற ஆவணங்களை சேகரித்து அதனை தாக்கல் செய்தார் என்றும் அந்த ஆவணங்கள் வழக்கிற்கு விரோதமாக உள்ள காரணத்தினால் எங்கள் தரப்பில் மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மனுதாரரின் கணவருக்கு

08.02.2022 வரை ஓட்டுநர் உரிமம் ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான், ஆனால் விபத்து 12.10.2022 அன்று நடந்தது. அவர் உயிரோடிருந்தால் ஓட்டுநர் உரிமத்தை புதுப்பிக்க மார்க்கம் உண்டு என்றால் சரிதான். இறந்த நபரை பொறுத்த வரை எந்த ஒரு விதிமீறலும் இல்லாத காரணத்தினாலும், விபத்தில் சம்பந்தப்பட்ட இன்னோவா கார் முழுமையான காப்பீடு செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், மனுதாரருக்கு நாங்கள் தான் உரிய இழப்பீட்டு தொகையை வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi